


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 10, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 36 ❖ ரூ.10

### வாக்களிப்பதால் ஜனநாயக மரபு வலுவாக மாறும்: தலைமை தேர்தல் கமிஷனர்

# நம்பிக்கை!

## தமிழக வரைவு வாக்காளர் பட்டியலில் 6.18 கோடி பேர் வழக்கம் போல் ஆண்களை விட பெண்களே அதிகம்



சென்னை, நவ.10

தமிழகத்தில் நேற்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.18 கோடி பேர் வாக்காளர்களாக உள்ளனர். இவர்களில் வழக்கம்போல் ஆண்களை விட, பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளது தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் உள்ள குழப்பங்கள், குறைகளை சரி செய்யும் நோக்கில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைப்பு பணி கடந்த ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. இதையொட்டி துணை மற்றும் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணி கடந்த மாதம் 25ம் தேதி தொடங்கி 7ம் தேதியுடன் முடிவடைந்தது.

தமிழகத்தில் நேற்று அனைத்து மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. சென்னையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டு நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மொத்தம் 6 கோடியே, 18 லட்சத்து, 26 ஆயிரத்து, 182 வாக்காளர்கள் உள்ளனர். இதில், ஆண் வாக்காளர்கள் 3 கோடியே, 3 லட்சத்து 95 ஆயிரத்து, 103 பேரும், பெண் வாக்காளர்கள் 3 கோடியே, 14 லட்சத்து, 23 ஆயிரத்து, 321 பேர் உள்ளனர். 3-ம் பாலின வாக்காளர்கள் 7,758 பேர் உள்ளனர். தமிழகத்தில் ஆண்களை விட பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர்.

அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில் 6.65 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 1.72 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய (நேற்று) நவ.9ம் தேதி முதல் டிச.8-ம் தேதி வரையிலான ஒரு மாத காலத்தில் 4 சிறப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. நவ.12, நவ.13, நவ.26 மற்றும் நவ.27 ஆகிய நாட்களில் இந்த சிறப்பு முகாம்கள் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 6,61,124 ஆண் வாக்காளர்கள், 6,78,887 பெண் வாக்காளர்கள் மற்றும் 65 மூன்றாம் பாலினத்தவர்கள் சேர்த்து மொத்தம் 13,40,076 வாக்காளர்கள் 2023ம் ஆண்டிற்கான வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் ஆண் வாக்காளர்கள்: 12,96,075, பெண் வாக்காளர்கள்: 13,38,950, மூன்றாம் பாலின வாக்காளர்கள்: 213 ஆக மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 26,35,238 ஆகும்.

சேலம் மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 14,79,231 ஆண் வாக்காளர்களும், 14,94,771 பெண் வாக்காளர்களும், 248 இதர வாக்காளர்களும் என மொத்தம் 29,74,250 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 5,56,996 ஆண் வாக்காளர்கள், 5,56,186 பெண் வாக்காளர்கள் மற்றும் 212 இதர வாக்காளர்கள் என மொத்தம் 11,13,394 வாக்காளர்கள் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் 2,52,610 ஆண் வாக்காளர்கள், 2,53,451 பெண் வாக்காளர்கள் மற்றும் 10 இதர வாக்காளர்கள் என மொத்தம் 5,06,071 வாக்காளர்கள் உள்ளனர்.

### இந்தியாவில் செஞ்சுரி அடித்த 2.49 லட்சம் வாக்காளர்

மராட்டிய மாநிலம் புனேயில் நடந்த வாக்காளர் பதிவு குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் ராஜீவ்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: நாட்டில் 100 வயதுக்கு மேல் 2.49 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 80 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 1.8 கோடி பேர் உள்ளனர்.

சமீபத்தில் இறந்த இந்தியாவின் முதல் வாக்காளர் ஷியாம் சரண் நேகிக்கு 106 வயதாகும். அவர் இறப்பதற்கு 3 நாட்களுக்கு முன் தபால் மூலம் வாக்கு அளித்தார். இது தான் கடமை உணர்வு. ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் திருத்தம் நடைபெறுகிறது. நகர்புறங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கமாகும். வாக்களிப்பதன் மூலம் மட்டுமே ஜனநாயக மரபுகள் முற்றிலும் வலுவாக மாறும். இவ்வாறு தலைமை தேர்தல் ஆணையாளர் ராஜீவ்குமார் தெரிவித்தார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்

## உச்சநீதிமன்ற 50வது புதிய தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திர சூட் பதவியேற்பு



புதுடெல்லி, நவ.10

உச்ச நீதிமன்றத்தின் 50வது தலைமை நீதிபதியாக நீதிபதி டிஒய் சத்திரசூட் நேற்று (புதன்கிழமை) பதவி ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி திரவுபதி முர்மு ராஷ்ட்டிரபதி பவனில் அவருக்குப் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த யு.யு.லலித்தின் பதவிக்காலம் நிறைவடைந்ததால் அவருடைய அலுவல் பணிகளும் முடித்து வைக்கப்பட்டன. இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் 50-வது புதிய தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திர சூட் பதவியேற்றார். விழாவில், பிரதமர் மோடி மற்றும் முக்கிய மத்திய அமைச்சர்கள் பங்கேற்றனர்.

கடந்த 1998ம் ஆண்டு கூடுதல் சொலிசிடர் ஜெனரலாக பணியாற்றிய டி.ஒய். சந்திரசூட், 2013ம் ஆண்டு அலகாபாத் ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார். பின்னர் 2016ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார். உச்ச நீதிமன்றத்தின் 50-வது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள டி.ஒய்.சந்திரசூட் வரும் 2024 நவம்பர் 10 வரை தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார்.

தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள சந்திரசூட் இந்தியாவே எதிர்பார்த்த மிகவும் முக்கியம் வாய்ந்த அயோத்தியா சர்ச்சை, ஆதார் கார்டு மற்றும் சபரிமலை கோவிலில் பெண்கள் போன்ற வழக்குகளில் தீர்ப்பு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிபதி டி.ஒய். சந்திரசூட், உச்ச நீதிமன்றத்தின் 16வது தலைமை நீதிபதியாக இருந்த ஒய்.வி.சந்திரசூட்டின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை, ராமாபுரம் டி.வி நகரில், தமிழக செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று அரசால் அறிவிக்கப்பட்ட சிலைகள் செய்யும் பணிகளை பார்வையிட்டார். அருகில் செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் ஜெயசீலன் உள்ளார்.

## மறமடக்கி மக்கள் தொடர்பு முகாமில் ரூ.2.45 கோடியில் நலத்திட்ட உதவிகள்

### அமைச்சர் மெய்யநாதன் வழங்கல்



அறந்தாங்கி, நவ.10

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மறமடக்கி வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம், நேற்று நடைபெற்றது.

முகாமில், 1,368 பயனாளிகளுக்கு ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் வழங்கி பேசியதாவது:

ஏழை, எளிய குடும்பங்களை சேர்ந்த மாணவ, மாணவிகளும் உயர்தரத்திலான கல்வியைபெறவேண்டும் என்ற அடிப்படையில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி அழியாநிலையில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் 40,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ஆலங்குடியில் புதிதாக புறவழிச்சாலையும், வம்பன் அருகில் புதிய துணை மின்நிலையமும் அமைக்கப்படவுள்ளது. முதல்வர், தமிழகத்தில் அனைத்து தொகுதிகளின் கோரிக்கைகளையும் நிறைவேற்றும் வகையில் ஒவ்வொரு தொகுதிக்கும் தீர்க்கப்படாத 10 கோரிக்கைகள் பெறப்பட்டு அவற்றை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசினார்.

தொடர்ந்து வேளாண் பொறியியல்துறை சார்பில் 13 வட்டாரங்களுக்கும் புதிதாக 32 உழுவை இயந்திரங்களை ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து அறந்தாங்கி வட்டத்திற்குட்பட்ட 3 உழுவைஇயந்திரங்களை அமைச்சர் மெய்யநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## அரசு பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார் எம்.எல்.ஏ.,



கந்தர்வக்கோட்டை, நவ.10

புதுக்கோட்டை மாவட்டம் கிள்ளுக்கோட்டை கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழகஅரசுசார்பில்இலவச மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை பங்கேற்று மாணவ மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கினார்.


புதுக்கோட்டை மாவட்டம் கிள்ளுகோ கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் புதுக்கோட்டை வருவாய் மாவட்ட அளவில் நடைபெற்ற கபடி போட்டியில் 17வயது உட்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் அணியும் தருமபுரியில் நடைபெறும் மாநில அளவிலான கபடி போட்டிக்கு தகுதி பெற்றனர். மேலும் 14 வயதுஉட்பட்ட பெண்கள் அணி பெண்கள் செங்கல்பட்டில் நடைபெறும் மாநில போட்டிக்கு தகுதி பெற்றனர். இவர்களை கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கேகேசெல்ல பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.சேட்டு, சண்முகம், கிள்ளுக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் கோகிலா அறிவானந்தம், பெற்றோர் ஆசிரியர் கழகம் நிர்வாகிகள் முன்னிலையில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர் செழியன், மயில்ராஜன் ஆகியோர் பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சுந்தர்ராஜன் மற்றும் ஏராளமான ஆசிரியர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் மாணவிகள் பங்கேற்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,775 | Rs.5,177 |

# இந்தியா 30 முதல் 40% வளர்ச்சி அடைய வேண்டும் ஜி–20 இந்திய குழு தலைவர் பேச்சு

புதுடெல்லி, நவ.10

ஜி-20 என்னும் அமைப்பில் அர்ஜெண்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிகோ, ரஷியா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய 19 நாடுகளும், ஐரோப்பிய யூனியனும் இடம் பெற்றுள்ளன. ஜி20 அமைப்புக்கு அடுத்த மாதம் 1ம் தேதி இந்தியா தலைமை ஏற்க இருக்கிறது. இதையொட்டி காணொலிக்காட்சி வழியாக நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, ஜி-20 அமைப்பின் சின்னம், கருப்பொருள், இணையதளம் ஆகியவற்றை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்து பேசினார்.



இதையொட்டி, நேற்று டெல்லியில் ஜி20 அமைப்புக்கான இந்திய குழுவின் தலைவர் மற்றும் நிதி ஆயோக்கின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான அமிதாப் கந்த், தொழிலதிபர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பேசியதாவது: ஜி--20 அமைப்புக்கு தலைமை தாங்கும் பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்திருப்பதன் மூலம், பல்வேறு தரப்பு வர்த்தகர்களுடன் உரையாடுவதற்கான பெரிய சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. அதனால், இந்த வாய்ப்பை பயன்படுத்தி நீங்கள் உங்களது துறை சார்ந்த தொழில்களில் இன்னும் பெரிய அளவில் வரவேண்டும். இந்த சந்தர்ப்பம் மீண்டும் உங்களுக்கு ஒருபோதும் வராது. உலகளாவிய சவாலான சூழலில் ஜி-20 தலைமைத்துவம் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

அடுத்த 30 ஆண்டுகளில் இந்தியா 9 முதல் 10 சதவீத வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், நீங்கள் அனைவரும் ஆண்டுக்கு 30 முதல் 40 சதவீத வளர்ச்சி அடைய வேண்டும். இதுவே இந்தியாவுக்கான சவாலாக உள்ளது. ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களது (தனியார் துறை) வளர்ச்சி மற்றும் வளம் இன்றி இந்தியா வளமடையாது. நாட்டுக்கு ஓர் அம்பானி மற்றும் அதானி மட்டும் இருப்பது போதாது. 10 ஆயிரம் அம்பானிகள், 20 ஆயிரம் அதானிகள் வேண்டும். அதன்பின்னரே இந்தியா வளர்ச்சி அடையும்.

இவ்வாறு அமிதாப் கந்த் பேசினார்.

# தமிழக கவர்னருக்கு எதிரான புகார் மனு ஜனாதிபதி அலுவலகத்தில் தி.மு.க., ஒப்படைப்பு

சென்னை, நவ.10

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வலியுறுத்தி தி.மு.க., கூட்டணி எம்.பி.,க்கள் கையெழுத்திட்ட கோரிக்கைமனு ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.



சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் நீண்ட காலமாக கவர்னர் ஆர்.என்.ரவி நிலுவையில் வைத்துள்ளதாக தி.மு.க., கூட்டணி குற்றம்சாட்டியது. மேலும், கவர்னர் ஆர்.என். ரவி அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்பேன் என்ற பதவிப் பிரமாண உறுதிமொழியை மீறி விட்டார் என்றும், மதவெறுப்பைத் தூண்டி, மாநிலத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக கவர்னர் இருக்கிறார் எனவும், கவர்னர் பதவியிலிருந்து ஆர்.என்.ரவியை நீக்கி, அரசியலமைப்பு விழுமியங்களை பாதுகாத்திட வேண்டும் என்றும் தி.மு.க., புகார் தெரிவித்துள்ளது. கவர்னரை திரும்ப பெறக்கோரிய மனுவில் தி.மு.க., கூட்டணி கட்சிகள் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ள நிலையில் இந்த மனு ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.






கனமழை எச்சரிக்கை காரணமாக தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதால் மீனவர்கள் நேற்று முதல் கடலுக்குள் செல்லாமல் படகுகளை கரையில் நிறுத்தி வைத்துள்ளனர்.

# இடிந்த நிலையில் அரசு பள்ளி கட்டிடம் அப்புறப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

கறம்பக்குடி நவ10

கறம்பக்குடி அருகே கண்ணக்கண்காடு ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளியில் இடிந்த நிலையில் இருக்கும் கட்டிடத்தை அப்புறப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா கண்ணக்கன்காடு ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை 200 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 6 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இங்கு பழுதான பழுதடைந்த கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் அந்தக் கட்டிடத்தில் மாணவர்கள் உள்ளே அனுமதிக்கப்படாமல் உள்ளது. மாணவர்கள் அருகில் உள்ள கட்டிடங்களில் பயின்று வருகின்றனர். இந்த கட்டிடத்தை அப்புறப்படுத்த கோரிக்கை விடுத்தும் அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதாக பெற்றோர்கள் கூறுகின்றனர்.

பள்ளி இடைவேளை நேரங்களிலும், பள்ளி விடுமுறை நாட்களிலும் இந்த கட்டிடத்தின் அருகில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். இந்தக்கட்டிடம் எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. தற்போது மழை பெய்ய தொடங்கி உள்ளதால் கட்டிட மேலும் பலவீனம் அடைந்து விரைவாக விழும் நிலையில் உள்ளது. எனவே, பழுதடைந்த கட்டிடங்களை உடனடியாக அப்புறப்படுத்தி புதிய பள்ளி கட்டிடம் கட்டி தர பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் போக்குவரத்து விழிப்புணர்வு கருத்தரங்கம்

புதுக்கோட்டை, நவ.10

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் நடந்த போக்குவரத்து விழிப்புணர்வு கருத்தரங்கில் போலீஸ் டி.எஸ்.பி., ராகவி கலந்து கொண்டார்.



புதுக்கோட்டை கைக்குறிச்சி வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் புதுக்கோட்டை போக்குவரத்து காவல்துறையும் இணைந்து நடத்திய போக்குவரத்து விழிப்புணர்வு கருத்தரங்கிற்கு கல்லூரி செயலாளர் பி.கருப்பையா தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் ஜீவானந்தம் வரவேற்றார். கருத்தரங்கில், டி.எஸ்.பி., ராகவி பங்கேற்று சாலை பாதுகாப்பு குறித்த விளக்க கையேடு மாணவ, மாணவிகளுக்கு வழங்கியும் சாலை பாதுகாப்பு குறித்து நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதை போட்டிகளில் மின்னியல் துறை மாணவர்கள் ஷர்மிளா மற்றும் திருப்பதி, மாணவி அபிநயாவுக்கும் பரிசுகள் வழங்கி சிறந்த ஓட்டுனர்களுக்கு நற்சான்று வழங்கி பேசுகையில், சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு, சாலைகளில் இளைஞர்கள் சாகச வேலைகள் ஏதும் காட்ட கூடாது. அத்துடன் சாலைகளில் வாகனங்களில் செல்லும்போது அதிக வேகமாக செல்லக்கூடாது.

சாலை விபத்துகள் அனைத்தும் சிறிய தவறுகள் மற்றும் கவனக்குறைவு காரணமாகவே ஏற்படுகின்றது. உயிர் ஒவ்வொருவருக்கும் முக்கியம். சாலைகளில் வாகனங்களில் செல்லும்போது அலட்சியம் காட்டாமல் கவனமாக வாகனங்களை ஓட்டி விபத்துகளை தவிர்ப்போம் என்றார்..

கருத்தரங்கில் புதுகை நகர போலீஸ் எஸ்.ஐ., மரிய சாத்தோ திலகராஜ், மருத்துவர் கோபாலகிருஷ்ணன், அனைத்துத் துறை ஆசிரியர்கள், கல்வியல் கல்லூரி முதல்வர் இளங்கோவன், மாணவ, மாணவியர் பங்கேற்றனர். என்.எஸ்.எஸ்., அலுவலர்கள் மர்டோனா, முருகானந்தம், பிரபுதாசன் கல்யாணசுந்தரம் ஆகியோர் கருத்தரங்க ஏற்பாடு செய்தனர். கருத்தரங்கில் அனைவருக்கும் சாலை பாதுகாப்பு குறித்த விளக்க கையேடு வழங்கப்பட்டது. துறைத் தலைவர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

# தேசிய வாக்காளர் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி



பொன்னமராவதி, நவ.10

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பொன்-புதுப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வருவாய் துறை சார்பில் நடைபெற்ற

தேசிய வாக்காளர் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை ஆர்.டி.ஓ., குழந்தைசாமி துவக்கி வைத்தார்.

சைக்கிள் பேரணி அப்பள்ளி தலைமையாசிரியர் நிர்மலா தலைமையில், வட்டாட்சியர் பிரகாஷ், சேகர், காவல் ஆய்வாளர் தனபாலன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கிய மாணவிகளின் தேசிய வாக்காளர் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி கொடியசைத்து துவக்கிவைத்தார்.

அப்பள்ளிவளாகத்தில் தொடங்கிய தேசிய வாக்காளர் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் 50க்கு மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு மலையாண்டி கோயில் வழியாக ஊரணியை சுற்றி வந்து பள்ளி வளாகம் சென்று பேரணியை நிறைவு செய்தனர். இந்நிகழ்வில் வருவாய் துறையினர், காவல்துறையினர் மற்றும் அப்பள்ளி ஆசிரியர்கள் என பலர் பங்கேற்றனர்.

# புதுகையில் மின்வாரிய ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை, நவ. 10–

தனியாருக்கு தாரைவாக்கும் வாரிய ஆணை எண் 2-ஐ ரத்து செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு ஓய்வு பெற்ற மின் ஊழியர் நலச்சங்கத்தின் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மின்வாரிய அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஓய்வூதியர் நல சங்கத்தின் கிளை துணைத்தலைவர் கருப்பையா தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்திற்கு கலந்து கொண்டு மத்திய அமைப்பின் திட்ட பொருளாளர் ஆறுமுகம், சி.ஐ.டி.யு., மாவட்டத் தலைவர் முகமது அலி ஜின்னா, சங்கத்தின் கிளை செயலாளர் ஆவுடை முத்து உள்ளிட்டோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் தனியாருக்கு தாரை வார்க்கும் வாரிய ஆணை எண் 2-ஐ ரத்து செய்ய வேண்டும். முடக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியத்தை மீண்டும் வழங்க வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைகளை களைந்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# மதுரையில் ஜல்லிக்கட்டு பேரவை 16–வது மாநில பொதுக்குழு கூட்டம்

மதுரை, நவ.10–

மதுரையில் தமிழ்நாடு ஜல்லிக்கட்டுப் பேரவையின் 16-வது மாநில பொதுக்குழு கூட்டம் மதுரை மேலமடை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. ஜல்லிக்கட்டுப் பேரவைத் தலைவர் ராஜசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த பொதுக்குழு கூட்டத்தில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, ராம்நாடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் தமிழக வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



பின்னர் ஜல்லிக்கட்டு பேரவை மாநிலத் தலைவர் ராஜசேகர் செய்தியாளிடம் கூறியதாவது: ஜல்லிக்கட்டு பேரவை 2007 முதல் நீதிமன்றம், அரசு மற்றும் பொதுமக்களிடம் வலியுறுத்தி தொடர்ந்து நடத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை எப்படி சமாளிப்பது? என்பது குறித்து தமிழக முழுவதும் உள்ள எங்கள் அமைப்பின் முக்கிய தலைவர்களை அழைத்து அவசர ஆலோசனை ஒன்று நடத்தி உள்ளோம். மத்திய, மாநில, அரசுகள் நீதிமன்றத்தில் வலுவான வாதத்தை வைக்க வேண்டும் என்பதற்காக இந்த சிறப்பு கூட்டத்தை நடத்தியுள்ளோம். ஜல்லிக்கட்டு பேரவை மூலமாக மத்திய, மாநில அரசுகளை திரும்பிப் பார்க்கும் வகையில் ஒரு முடிவு எடுக்க உள்ளோம். இந்த முடிவு தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. தமிழகம் முழுவதும் உள்ள ஜல்லிக்கட்டு நலன் விரும்பிகள் அனைவரையும் அழைத்து அவரிடம் ஆலோசனை பெற்ற பின்னரே அறிவிக்கப்படும், என்றார்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற மதுரை எம்.பி., வெங்கடேசன் செய்தியாளிடம் கூறியதாவது: ஜல்லிக்கட்டு போட்டிகளை காக்க வேண்டிய முக்கியமான பொறுப்பில் இருக்கிறோம். சமூக அழுத்தத்தை உருவாக்கினால் தான் இந்த வழக்கில் நமக்கு சாதகமான தீர்ப்பு வரும் என்ற சூழல் உள்ளது. சட்ட ரீதியான போராட்டத்தை நீதிமன்றத்தில் சந்திக்க இருக்கிறோம். அது தொடர்பாக ஜல்லிக்கட்டு பேரவை ஒரு முக்கிய முடிவை எடுத்திருக்கிறது. ஜல்லிக்கட்டு என்பது தமிழ் சமூகத்தின் ஒரு அடையாளம். அதை காக்க நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றார்.

# வேலூர் மருத்துவ கல்லூரியில் மாணவர்கள் ராகிங் அரை டவுசருடன் ஓட விட்ட சீனியர் மாணவர்கள்

வேலூர், நவ.10

வேலூர் மருத்துவக்கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்களை ராக்கிங் செய்தது தொடர்பாக சீனியர் மாணவர்கள் 7 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர் என்று கல்லூரி முதல்வர் சாலமன் சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

வேலூர் பாகாயத்தில் பிரபல தனியார் மருத்துவக் கல்லூரி உள்ளது. இங்கு விடுதியில் புதிதாக சேர்ந்த மாணவர்களை சீனியர் மாணவர்கள் ராக்கிங் செய்துள்ளனர். ராக்கிங் கொடுமைகள் அனைத்தும் வீடியோவில் பரவி வருகிறது. முதலாம் ஆண்டு மாணவர்களை அரை டவுசருடன் விடுதி வளாகத்தை சுற்றி வர செய்தனர். அவர்கள் ஓடி வரும்போது தண்ணீரை பீய்ச்சி அடித்து ஆரவாரம் செய்துள்ளனர். இரண்டு மாணவர்களை கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கவைத்துள்ளனர். இந்த வீடியோ தற்போது மாணவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. புதிதாக சேர்ந்த மாணவர்களை அரை டவுசருடன்



விடுதி வளாகத்தை சுற்றி வர வைத்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முதலாம் ஆண்டு மாணவர்கள் விடுதி வார்டன் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினருக்கு எழுதியுள்ள கடிதத்தில், "மாணவர்கள் தங்கும் விடுதியில் புதிதாக சேர்ந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆடைகளை களைந்து விடுதி வளாகத்தை சுற்றி வர வைத்தனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் உடல் ரீதியாக எவ்வாறு துன்புறுத்தப் பட்டார்கள்? என்பதை அந்த மாணவர்களே தங்களது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளனர். டெல்லியில் இருக்கும் ராக்கிங் தடுப்புப் பிரிவுக்கும் புகார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி நிர்வாகம் நடத்திய முதற்கட்ட விசாரணைக்கு பின் சீனியர் மாணவர்கள் 7 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர் என்று கல்லூரி முதல்வர் சாலமன் சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# காரைமேடு ஒளி லாயத்தில் உலக நன்மை வேண்டி சிறப்பு யாகம்



சீர்காழி, நவ. 10-
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காரைமேடு ஒளியாயத்தில் 18 சித்தர்களுக்கு தனி கோயில் அமைந்துள்ளது. இங்கு 27 நட்சத்திரங்களுக்கும் உரிய மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பசுவை அழிவிலிருந்து காப்பாற்ற பசுமடம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. தினதோறும் அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது. இங்கு மாத தோறும் பௌர்ணமி அன்று உலக நன்மைவேண்டி சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஒளிலாயத்தில் ராஜேந்திர சுவாமிகள் ஜீவசமாதி அமைந்துள்ளார். இத்தகைய புகழ் பெற்ற ஒலிலாயத்தில் பௌர்ணமியை முன்னிட்டு உலக நன்மை வேண்டி சிறப்பு யாகம் நடைபெற்றது.

விழாவையொட்டி தேவவிற்பன்னர்கள் மந்திரங்கள் முழங்க சிறப்பு ஏகா தச ருத்ர ஹோமம் செய்யப்பட்டு பூர்ணாஹுதி, தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்பு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை நாடி. செல்வ முத்துக்குமரன், செந்தமிழன் பொறியாளர், மாமல்லன் செய்திருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம்,பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி ஊராட்சி மன்ற தலைவர் அர்ஜுனன் கலந்துகொண்டு பதினோராம் வகுப்பு படிக்கும் 54 மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வள்ளியம்மாள் வெங்கடேசன், வார்டு உறுப்பினர்கள் செல்வி சேகர்,ஆசிர்வாதம் சிகாமணி, அனிதா அமுல்ராஜ்,கோபால்,நீலமேகம்,திமுக கிளை கழக செயலாளர் சீனிவாசன்,பண்ருட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் காண்டீபன், உதவி தலைமை ஆசிரியர் மார்டின் சூசை ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# போலி வங்கி: சி.பி.சி.ஐ.டி.போலீசார் சோதனை



ஈரோடு, நவ,10
சென்னை, ஈரோடு உள்பட 8 இடங்களில் ஊரக மற்றும் வேளாண்மை விவசாயிகள் கூட்டுறவு வங்கி லிமிடெட் என்ற பெயரில் ஒரு வங்கி செயல்பட்டு வந்தது. இந்த வங்கி குறித்து ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் சென்னை குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர்.

இதில் இந்த வங்கி போலியானது என தெரிய வந்தது.இது தொடர்பாக வங்கியின் உரிமையாளர் சந்திரபோஸ் என்பவரை போலீசார் கைது செய்து அவரிடம் இருந்து பணம் மற்றும் சொகுசு கார்களை பறிமுதல் செய்தனர்.இந்த நிலையில் ஈரோடு சோலார் பகுதியில் செயல்பட்டு வந்த போலி வங்கியில் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை நடத்த முடிவு செய்தனர். அதன்படி சென்னையில் இருந்து நேற்று காலை போலீசார் வந்தனர். அவர்கள் காலையில் இருந்து மாலை வரை வங்கியில் சோதனை நடத்தினர்.

அப்போது இந்த வங்கி சோலார் பகுதியில் கடந்த 2 மாதமாக செயல்பட்டு வந்ததும், இந்த வங்கியில் 8 பேர் மட்டுமே சேமிப்பு கணக்கு வைத்திருந்ததும் தெரியவந்தது.இதையடுத்து குற்றப்பிரிவு போலீசார் போலி வங்கியில் இருந்து கம்ப்யூட்டர், லேப்டாப், செக் புத்தகங்கள், பாஸ் புத்தகங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை எடுத்து சென்றனர்.

மேலும் இந்த வங்கி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதும் தெரிய வந்தது. நேற்று போலீசார் வந்ததை தொடர்ந்து இங்கு பணியாற்றும் ஊழியர்கள் யாரும் பணிக்கு வரவில்லை. எனவே இந்த வங்கியில் பணியாற்றிய ஊழியர்களிடம் விசாரிக்கவும் போலீசார் முடிவு செய்துள்ளனர்.இதற்கிடையே போலி வங்கியின் முன்பு அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகையும் அகற்றப்பட்டது.

# ராள்ளபாடி ஆதரவு இல்லத்தில் சிகிச்சை பெற்று வந்த வாலிபர் பூரண குணமடைந்து சொந்த ஊருக்கு சென்றடைந்தார்



ஊத்துக்கோட்டை, நவ10-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், குமரப்பேட்டை ஊராட்சியில் பெரியபாளையம்-ஆரணி நெடுஞ்சாலையில் ராள்ளபாடி கிராமத்தில் ஆதரவு இல்லம் என்ற பெயரில் மனநல மையம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நிலையில்,கடந்த 2022 ஆண்டு மார்ச் மாதம் 30-ம் தேதி பெரியபாளையம்-ஆரணி நெடுஞ்சாலையில் சுற்றி கொண்டிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட 29 வயதான வாலிபர் ஒருவரை காவல்துறையினர் இந்த இல்லத்தில் கொண்டு வந்து பாதுகாப்பாக தங்க வைத்தனர்.

அந்தவாலிபருக்குஆதரவு இல்லத்தின் நிறுவனரும், அறங்காவலருமான கோடீஸ்வரராவ்,துணை நிறுவனர் ஜீவாராவ் ஆகியோர் கடந்த எட்டு மாதங்களாக தொடர்ந்துசிகிச்சை அளித்தனர். பூரண குணமடைந்த அந்த வாலிபர் தான் பாட்னாவை சேர்ந்த விவசாயி ராம்-லட்சுமி தம்பதியரின் மகன் என்றும் தனது பெயர் விஜயகுமார்ராம்(வயது29) என்றும் கூறினார்.தனக்கு இரண்டு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உள்ளதாக கூறினார்.

மேலும், தனது தந்தை 2009-ம் ஆண்டு உடல் நலக் குறைவால் இறந்துவிட்டார். தனது தாய் மனநோயால் பாதிக்கப்பட்டு 15 வருடங்களாக சிகிச்சை பெற்று வருகின்றார் என கூறினார்.2020-ம் ஆண்டு சென்னை,செங்குன்றம் அருகே அரிசி ஆலையில் வேலை செய்து வந்ததாகவும், கொரோனா என்ற கொடிய நோயால் நாடு முழுவதும் வேலை இழப்பு ஏற்பட்டதால் மனநலம் பாதிக்கப்பட்டு இப்பகுதிக்கு நடந்து வந்து சுற்றித்திரிந்ததையும் நினைவு கூறினார்.

பூரண குணமடைந்த விஜயகுமார்ராம் தனது சகோதரரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். பின்னர், சென்னை குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் தாஹிரா உதவியுடன் பூரண குணமடைந்த வாலிபர் விஜயகுமார்ராமை சென்னையில் இருந்து ரயில் மூலம் பாட்னாவிற்கு கோடீஸ்வரராவ், ஜீவாராவ் ஆகியோர் அனுப்பிவைத்தனர். பாட்னா சென்றடைந்த அந்த வாலிபர் தனது சிகிச்சைக்கும், குடும்பத்துடன் சேர்த்து வைத்த அனைவருக்கும் தனது குடும்பத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொண்டார்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் ச.சந்தோஷினி சந்திரா ,நேற்று ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட, வ.உ.சிதம்பரனார் பூங்கா விளையாட்டு மைதான முகப்பில் வாக்காளர் விழிப்புணர்வு நடைபயணத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) பொன்மணி மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஸ்குமார் உடன் இருந்தார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், வரைவு வாக்காளர் பட்டியலினை வெளியிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சந்தோஷினி சந்திரா, உதவி ஆட்சியர் (பயிற்சி) பொன்மணி உட்பட பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரமுகர்கள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் இரா .லலிதா வெளியிட்டார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ. முருகதாஸ், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ. யுரேகா, தேர்தல் வட்டாட்சியர் ஜெனிட்டா மேரி, ஆகியோர் உடன் உள்ளனர்



கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சிக்குட்பட்ட சுசீந்திரம் கோவில் அருகில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

## குருவாயல் கிராமத்தில் வேனை வழிமறித்து

# வியாபாரியிடம் செல்போன், பணம் பறிப்பு நான்கு வாலிபர்கள் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, நவ10-
திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் அருகே உள்ள குருவாயல் கிராமத்தில் முருகன் கோவிலில் நேற்று முன்தினம் நிச்சயதார்த்த நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.இதற்கு ஆவடி பாலவேடு கிராமம்,கர்ணன் தெருவை சேர்ந்த வியாபாரி தினேஷ்பாபு(வயது36) என்பவர் பந்தல் மற்றும் சவுண்ட் சர்வீஸ் அமைத்திருந்தார்.

இந்நிலையில்,அவர் நிகிழ்ச்சி முடிந்த பின்னர் நேற்று விடியற் காலை அனைத்தையும் அவிழ்த்து வேனில் ஏற்றிக்கொண்டு சென்று தனது கடைக்கு கொண்டிருந்தார். குருவாயல்-காரணி கூட்ரோடு சாலையில் குருவாயில் அரசு ஆஸ்பத்திரி அருகே சென்றபோது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு வாலிபர்கள் வேனை திடீரென வழிமறித்தனர். கண்ணிமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கிய அவர்கள் தினேஷ்பாபுவை சரமாரியாக தாக்கினர்.பின்னர்,அவரிடம் இருந்த விலை உயர்ந்த செல்போன் மற்றும் ரொக்க பணத்தை பறித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்றனர்.

இந்தச்சம்பவம் குறித்து தினேஷ்பாபு வெங்கல் காவல் நிலையத்தில் நேற்று புகார் செய்தார்.போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் தலைமையில் போலீசார் இந்த வழிப்பறி சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை வலைவீசி தேடி வந்தனர்.இந்நிலையில், செங்குன்றம்,காந்தி நகரைச் சேர்ந்த கிஷோர்(வயது18), செங்குன்றம், நாரவாரிக்குப்பம் பகுதியைச் சேர்ந்த நவீன்பாலாஜி(வயது18), பழையமகாபலிபுரம், நாவலூர் பகுதியைச் சேர்ந்த மகேஷ் (26),பூரிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சேதுராமன் (18) ஆகிய நான்கு பேரையும் போலீசார் பிடித்து வந்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்தனர்.அப்போது அந்த நான்கு வாலிபர்களும் வேனை வழிமறித்து செல்போன் மற்றும் ரொக்கப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றதை ஒப்புக்கொண்டனர்.

மேலும், அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். குற்றவாளிகளான நான்கு வாலிபர்கள் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து திருவள்ளூர் முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.அவரது உத்தரவின் பேரில் 4 பேரையும் போலீசார் புழல் சிறையில் அடைத்தனர்.

# தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது

## 15 மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு



சென்னை, நவ. 10-
வங்கக் கடலில் தென்மேற்கு பகுதி மற்றும் அதை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக 15 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தமிழகம், புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை காரணமாக தற்போது பல்வேறு இடங்களில் தென்மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. எனினும் வட மாவட்டங்களில் மழை குறைந்துள்ளது.

இந்நிலையில், வானிலை ஆய்வு மையம் ஏற்கெனவே கணித்துள்ளபடி, தென்மேற்கு வங்கக் கடல பகுதி மற்றும் அதை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து 4.5 கிமீ உயரம் வரை காற்று சுழற்சி நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக ஒரு காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இது அடுத்த இரண்டு நாட்களில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும்.பின்னர் அது வட மேற்கு திசையில் நகர்ந்து தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிக்கு இன்று ,நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யும். இதன்படி 9ம் தேதி இடி மின்னலுடன் லேசான மழையாக பெய்யத் தொடங்கி, கனமழையாக பெய்யும். 10ம் தேதி ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். 11ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்யும்.என தெரிவிக்க பட்டுள்ளது. மேலும் அவர் கூறுகையில் புயலாக வலுப்பெற வாய்ப்பு இல்லை, 13 தேதி வரை மழை பெய்யக்கூடும். சில பகுதிகளில் கனமழை பெய்யும் - என வானிலை ஆய்வு மையம் தென் மண்டல தலைவர் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

# காட்பாடி காந்திநகர் அரசு கல்வியியல் கல்லூரியில் வேலூர் ஆட்சியர் நேரில் ஆய்வு





வேலூர், நவ. 10-
காட்பாடி காந்திநகர் பகுதியில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரியில் மாணவர்களுக்கு புதியதாக தங்கும் விடுதி கட்டப்படும் இடத்தையும் மாணவர்களுக்கு பாடம் நடத்தும் அறையை பார்வையிட்டு ஆய்வு செய்து பேராசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கு அளிக்கும் பயிற்சி மற்றும் பாடங்கள் நடத்தப்படும் முறை குறித்து மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் ஆய்வு செய்தார்.

அரசு கல்வியியல் கல்லூரியின் கட்டிடங்கள் வளாகம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு மாணவர்களுக்கு எவ்வாறு பயிற்சிகள் வழங்கப்பட்டது என்பது குறித்து நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது.

கல்லூரியின் வளாகத்தை தூய்மையாக வைத்துகொள்ள கூடுதலாக பணியாளர்களை நியமிக்க வேண்டும். வருங்கால ஆசிரியர்களான மாணவர்கள் எவ்வாறு பாடம் கற்பிக்கின்றனர் என்பதையும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். ஆசிரியர்களுக்கு சில அடிப்படை நெறிமுறைகள் கற்பிக்கப்பட்டது.

ஆசிரியர்கள்பொருத்தவரை மிகவும் உற்சாகமாக பாடங்களை மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றனர். இந்த கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தி தரப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

# முகமது ரிஸ்வான், பாபர் அசாம் மிரட்டல் இறுதிபோட்டிக்கு முன்னேறியது பாகிஸ்தான் அணி

சிட்னி, நவ. 10-
ஆஸ்திரேலியாவில் நடந்து வரும் 8-வது 20 ஓவர் கிரிக்கெட் திருவிழா இறுதிகட்டத்தை நெருங்கி விட்டது. சிட்னியில் நேற்று நடைபெற்ற முதலாவது அரைஇறுதி ஆட்டத்தில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் கேன் வில்லியம்சன் பேட்டிங்கைத் தேர்வு செய்தார்.

இதன்படி நியூசிலாந்து அணியின் சார்பில் பின் ஆலென் மற்றும் டிவான் கான்வே ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். இந்த ஜோடியில் பின் ஆலென் 4 ரன்களில் ஆட்டமிழக்க அவரைத்தொடர்ந்து டிவான் கான்வேவும் 21 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய கிளென் பிலிப்ஸ் 6 ரன்களில் வெளியேறினார். பாகிஸ்தான் அணியின் சிறப்பான பீல்டிங் காரணமாக தொடர்ந்து ரன்கள் சேர்க்க நியூசிலாந்து அணியினர் போராடினர்.

அடுத்ததாக கேப்டன் கேன் வில்லியம்சுடன், டேரில் மிட்செல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியின் நிதானமான ஆட்டத்தால் அணியின் ரன் ரேட் மெதுவாக உயர்ந்தது. இந்த ஜோடியில் கேன் வில்லியம்சன் அரை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப் பட்டநிலையில் 42 பந்துகளில் 46 ரன்கள் எடுத்து போல்ட் ஆகி வெளியேறினார். மற்றொரு முனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டேரில் மிட்செல் 32 பந்துகளில் தனது அரை சதத்தை பதிவு செய்தார்.

முடிவில் டேரில் மிட்செல் 53 (35) ரன்களும், ஜேம்ஸ் நீஷம் 16 (12) ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 152 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் அணியின் சார்பில் அதிகபட்சமாக ஷகீன் அப்ரிடி அப்ரிடி 2 விக்கெட்டுகளும், முகமது நவாஸ் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்படி நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் அரையிறுதி போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு 153 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து 153 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணியின் சார்பில் அந்த அணியின் கேப்டன் பாபர் அசாம் மற்றும் முகமது ரிஸ்வான் ஆகியோர் முதலாவதாக களமிறக்கினர். ஆரம்பம் முதலே அதிரடியை துவங்கிய இந்த ஜோடி, அணியின் ரன் ரேட்டை வேகமாக உயர்த்தியது. நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் இவர்களின் ரன் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறினர். தொடர்ந்து அதிரடி காட்டிய இந்த ஜோடியில் பாபர் அசாம் தனது அரைசதத்தை பூர்த்தி செய்திருந்தநிலையில் 53 (42) ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார்.

மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த முகமது ரிஸ்வான் 36 பந்துகளில் தனது அரை சதத்தை பதிவு செய்தார். இதனிடையே அடுத்ததாக களமிறங்கிய முகமது ஹாரிஸ், முகமதுரிஸ்வானுடன் ஜோடி சேர்ந்து சீரான ரன் குவிப்பில் ஈடுபட்டார். இந்த சூழலில் முகமது ரிஸ்வான் 57 (53) ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார். இறுதியில் வெற்றிபெற 2 ரன்கள் தேவைப்பட்டநிலையில் அதிரடி காட்டி வந்த முகமது ஹாரிஸ் 30 (26) ரன்களில் ஆட்டமிழந்தார்.

முடிவில் ஷான் மசூத் 3 ரன்களும், இப்திகர் அகமது ரன் ஏதும் எடுக்காமலும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 19.1 ஒவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து ரன்கள் எடுத்தது. நியூசிலாந்து அணியின் சார்பில் அதிகபட்சமாக டிரெண்ட் போல்ட் இரண்டு விக்கெட்டுகளும், மிட்செல் சான்ட்னெர் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்மூலம் நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் அரையிறுதி போட்டியில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் டி 20 உலகக் கோப்பையின் இறுதிபோட்டிக்கு பாகிஸ்தான் அணி முன்னேறியது. நாளை நடைபெற உள்ள இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கிடையேயான போட்டியில் வெல்லும் அணி, பாகிஸ்தானை இறுதிபோட்டியில் வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்ள உள்ளது.

## திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு

# பக்கிங்காம் கால்வாய் ஓரம் வசிக்கும் மக்களுக்கு கொசுவலை வழங்கல்



சென்னை, நவ. 10-
வடகிழக்கு பருவ மழையின் தீவிரத்தினால் திருவொற்றியூர் மாநகராட்சி 1 வது மண்டலத்திற்கு உட்பட்ட 4,5,6,7 ஆகிய வார்டுக்கு உட்பட்ட கார்க்கில் நகர், ராஜாஜி நகர், கலைஞர்கள், ஜோதி நகர் அம்பேத்கர் நகர் பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

திருவொற்றியூர் 1வது மண்டல மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மோட்டார் இயந்திரங்கள் மூலம் மழை அகற்றி உடனடியாக துரிதரிதப்படுத்தி மழை நீரை அப்புறப்படுத்தினர்.

இரண்டு நாட்களில் மழை நீர் முற்றிலும் அகற்றப்பட்டது நிலையில் பக்கிங்காங் கனால் ஓரமாக வசிக்கும் மக்களுக்கு கொசுக்களில் ஏற்படும் தொற்று நோய்களை தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதி மக்களுக்கு கொசுவலை வழங்கப்பட்டது.

சென்னை திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு மாமன்ற உறுப்பினர்கள் கே. பி சொக்கலிங்கம், தம்பையா, திரவியம், ஜெயராமன் முன்னிலையில் அப்பகுதி மக்களுக்கு கொசு வலையை வழங்கினார்.

இதனை அடுத்து வடகிழக்கு பருவமழையால் அடுத்தடுத்து வரும் புயல் மற்றும் மழை பாதிப்புகளில் இருந்து மழை நீர் தேங்காமல் இருப்பதற்காக சென்னை குடிநீர் வாரியம் சார்பில் 60 லட்சம் ரூபாய் செலவில் புதிய ஜெட்ரோடு இயந்திரம் மற்றும் 10 லட்சம் ரூபாய் செலவில் தூர்வாரும் இயந்திரம் வாங்கப்பட்டு அவை மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

# திருவரங்குளத்தில் என்.எஸ்.எஸ்., முகாம்

திருவரங்குளம், நவ.10- திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் தலைமை ஆசிரியர் முருகையன் தலைமையில் நடந்தது.

முகாமில் முதுகலை ஆசிரியர் அன்பழகன் முன்னிலை வகித்தார். நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் பள்ளி வளாகம்சாலையோரங்கள் மற்றும் பிடாரியம்மன் கோவில் வளாகம் ஆகிய பகுதிகளில் சுத்தம் செய்து பணிகளைமேற்கொண்டனர். திட்ட ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தார்.



# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று ரூபாய் 1500 பரிசு பெற்ற மாணவிகள்

தேவகோட்டை, நவ.10 -சிவகங்கைமாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் சைவ, சமய பேச்சு போட்டிகளில் பங்கு பெற்று ரூபாய் 1,500 பரிசு பெற்றதற்கு பள்ளியில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பட்டுக்கோட்டை சிவனடியார்கள் திருக்கூட்ட அறக்கட்டளை சார்பில் பட்டுக்கோட்டையில் இருந்து தமிழ்நாடு முழுவதும் மாணவர்களுக்கு இணையம்வழியாகசைவ, சமய பேச்சுபோட்டிகளை நடத்தினார்கள். இதில் சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்றனர். மாணவிகள் கனிஷ்கா மற்றும் கனிகா ஆகியோர் முறையே ரூபாய் 500, 1000 பரிசுகளை வென்றனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு தெரிவித்து தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் பரிசு பணத்தை வழங்கினார். போட்டிகளில் மாணவர்களை பங்கு பெற வைத்த ஆசிரியை முத்துலெட்சுமிக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.



# திருவரங்குளத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு பயிற்சி: அதிகாரி ஆய்வு

ஆலங்குடி,நவ.10

திருவரங்குளம் வட்டார வளமையத்தில் நடைபெற்ற இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கான 5ம் கட்ட பயிற்சியினை மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, அங்கிருந்த தன்னார்வலர்களிடம் மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி பேசியதாவது: அனைத்து குழந்தைகளும் மொழி மற்றும் கணிதபபாடங்களில் உள்ள அடிப்படைத் திறன்களை அடைய வேண்டும் என்பதே இந்த பயிற்சியின் நோக்கம் ஆகும். இப்பயிற்சியில் கலந்து கொண்டுள்ள தன்னார்வலர்கள, முன்னறிவுத்தேர்வு நடத்தி மாணவர்களின் கற்றல் நிலையை அறிந்துகொள்ள வேண்டும். முன்னறிவுத் தேர்வின் மூலம் கற்றல் இடர்பாடுகளைக் கண்டறிந்து அதிலுள்ள திறன்களை மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டும். முன்னறிவுத்தேர்விற்கான வினாக்களை கரும்பலகையிலோ அல்லது தாள்களிலோ எழுதி தேர்வினை நடத்த வேண்டும் என்றார்.

ஆய்வின் போது, திருவரங்குளம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் தங்கமணி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீரப்பன், இல்லம் தேடி கல்வி திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

பயிற்சியின் கருத்தாளர்களாக திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியை ஜெயா, டி.தோப்புக் கொல்லை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியை உஷா ஆகியோர் செயல்பட்டனர்.





▶ சென்னை தலைமைச் செயலகத்தில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின் கீழ் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய பத்திரிக்கையாளர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து காசோலைகளை வழங்கினார். உடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) சிவ. சு.சரவணன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) மு.ப.அன்புச்சோழன், பத்திரிகையாளர் நலவாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் உள்ளனர்.

# காரைக்காலில் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி முகாம்

காரைக்கால் , நவ.10

காரைக்கால் அடுத்த செருமாவிளங்கை பகுதியில் பஜன் கோவா அரசு வேளாண் கல்லூரியும் இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நெல் பயிரில் அதிக மகசூல் பெற தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி முகாம் நடந்ததினர்.

இந்நிகழ்ச்சியை புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா துவக்கி வைத்து பேசும்பொழுது தாழ்த்தப்பட்ட விவசாயிகள் இந்த பயிற்சியில் பங்கு பெற்று புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். விவசாயிகள் விலை பொருட்களை மதிப்பு கூட்டி சந்தைப்படுத்தி அதிக லாபம் ஈட்டலாம் என்று கூறினார்.

பின்னர் 30 விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் சுமார் 90 தாழ்த்தப்பட்ட விவசாயிகள் கண்டறியப்பட்டு பயிற்சி அளித்து இடுபொருட்கள் வழங்கி நெல்லில் அதிக மகசூல் பெற வழிவகை செய்ய இருப்பதாக கல்லூரி முதல்வர் புஷ்பராஜ் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குனர் செந்தில்குமார், திருநள்ளாறு சட்டமன்ற உறுப்பினர் சிவா, பேராசிரியர்கள் சங்கர், பூங்குழலன், குமாரவேல், பார்த்தசாரதி, சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்




# ஆலங்குடியில் 2 பேர் தற்கொலை போலீசார் விசாரணை

ஆலங்குடி, நவ. 10

ஆலங்குடி அருகே உள்ள கும்மங்குளத்தை சேர்ந்த ஜெஸ்டின்ஜெயராஜ் ( 45). இவர் கடந்த 4 நாட்களுக்கு முன், விஷம் குடித்து வீட்டில் மயங்கி கிடந்துள்ளார். இதனைக் கண்ட குடும்பத்தினர் அவரை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இந்நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வந்த,ஜெஸ்டின்ஜெயராஜ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாகஉயிரிழந்தார். இதுகுறித்து ஆலங்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றொரு சம்பவம்: ஆலங்குடி கம்பர் தெருவை சேர்ந்த லாரி டிரைவர் கதிரேசன் (42). இவர், குடும்ப சொத்து காரணமாக வீட்டில் யாரும்இல்லாதநேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவலறிந்த ஆலங்குடி போலீசார், கதிரேசன் உடலை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆலங்குடியில் லாட்டரி விற்பனை 3 பேர் கைது: பணம் பறிமுதல்

ஆலங்குடி நவ10;

ஆலங்குடி அருகே உள்ள திருவரங்குளத்தில் சிலர் அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையில் ஈடுபடுவதாக ஆலங்குடி போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனைத்தொடர்ந்து, ஆலங்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நதியா தலைமையிலான போலீசார் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, திருவரங்குளம் பஸ் ஸ்டாப் அருகே லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட மாங்கனாம்பட்டியை சேர்ந்த பொற்பனையான் (35) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து, லாட்டரிகளையும், 850 ரூபாய் ரொக்கத்தையும் பறிமுதல் செய்தனர்.

இதேபோல், ஆலங்குடி அருகே உள்ள குளமங்கலம்தெற்கில்சிலர் லாட்டரி விற்பனையில் ஈடுபடுவதாககீரமங்கலம் போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனைத்தொடர்ந்து, கீரமங்கலம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குமாரவேல் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, அப்பகுதியில் உள்ள மளிகை கடையில் லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட பனங்குளம் தெற்கு பகுதியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் (61), பாண்டிகுடி ராஜேஷ் (31) ஆகிய இருவரையும் கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து 103 லாட்டரிகளையும், 3,180 ரூபாய் ரொக்கத்தையும் பறிமுதல் செய்தனர்.

# ஜம்மு–காஷ்மீரில் ஆற்றில் கார் பாய்ந்து 4 பேர் உயிரிழப்பு

தோடா, நவ.10

ஜம்-மு-காஷ்மீர் மாநிலம் தோடா பகுதியில் உள்ள பிரேம் நகர் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு ஒரு கார் சென்று கொண்டு இருந்தது. அப்போது அந்த கார் நிலை தடுமாறி அங்குள்ள ஆற்றில் பாய்ந்தது.

ஆற்றில் அதிகளவு தண்ணீர் ஓடியதால் கார் அதில் மூழ்கியது. இதனால் காரில் பயணம் செய்த 4 வாலிபர்கள் வெளியே வரமுடியாமல் உள்ளேயே சிக்கிக் கொண்டனர். சிறிது நேரத்தில் அவர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக மூச்சுத்திணறி உயிரிழந்தனர். இதுபற்றி தகவலறிந்த போலீசார் மற்றும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். ஆனால் இரவு நேரம் என்பதால் மீட்பு பணியை உடனடியாக மேற்கொள்ளவில்லை. நேற்று முதல் 4 பேரையும் தேடும் பணி நடந்து வருகிறது. நீரோட்டம் அதிகமாக இருப்பதால் தேடும் பணியில் தொய்வு ஏற்பட்டதாக மீட்பு படையினர் தெரிவித்தனர்.



▶ விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செஞ்சி தொகுதி மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் ஆலோசனை நடத்தினார்.




# நாகல்குழி கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் ரூ.29.30 லட்சத்தில் நலத்திட்ட உதவி வழங்கல்

அரியலூார், நவ.10

அரியலூர் மாவட்டத்தில்நடைபெற்ற மக்கள்தொடர்புமுகாமில் 198 பயனாளிகளுக்கு ரூ.29.30 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி வழங்கினார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், நாகல்குழி கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மையின் துறையின் சார்பில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி தலைமையில் நேற்று நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:

செந்துறை ஒன்றியம், நாகல்குழி கிராமத்தில் மக்கள்தொடர்புமுகாமில் பொதுமக்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.1.20 லட்சம் மதிப்பீட்டில் முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதியத்திற்கான ஆணைகளையும், 2 நபர்களுக்கு ரூ.16,000 மதிப்பீட்டில் திருமண உதவித்தொகைகளும், 4 நபர்களுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பில் இயற்கை மரண உதவித்தொகைகளும், 7 நபர்களுக்கு ரூ.2.80 லட்சம் மதிப்பீட்டில் காலிமனை பட்டா மற்றும் நத்தம் மனைப் பட்டாக்களுக்கான ஆணைகளும், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் சார்பில் 5 நபர்களுக்கு ரூ.21,660 மதிப்பீட்டில் இடுப்பொருட்கள் என பல்வேறு துறைகளின் சார்பில்198பயனாளிகளுக்கு ரூ.29.30 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

முகாமில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஈஸ்வரன், மகளிர் திட்ட அலுவலர் முருகண்ணன், கோட்டாட்சியர் பரிமளம் மற்றும்அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# நாய்கள் கடித்து ஆடுகள் இழந்த விவசாயிக்கு நாம் தமிழர் கட்சியினர் நிவாரணம் வழங்கல்

ஆலங்குடி, நவ 10

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே நாய்கள் கடித்து 8 ஆடுகள் இழந்த விவசாயிக்கு நாம்தமிழர் கட்சியினர் 4 ஆடுகளை நேற்று நிவாரணமாக வழங்கினர்.

ஆலங்குடிஅருகேயுள்ள வடகாடு ஊராட்சி குருந்தடிப்புஞ்சையைச் சேர்ந்தவர் பாலசந்தர் (42) விவசாயி. இவர், வளர்த்து வந்த ஆடுகளை வீட்டருகே உள்ள தோட்டத்தில் கட்டியுள்ளார். கடந்த 4-ம் தேதி அப்பகுதியில் சுற்றித் திரிந்த நாய்கள் ஆடுகளை கடித்து குதறியது. இதில், 8 ஆடுகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தன. இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பாலசந்தர், அப்பகுதி விவசாயிகள் இழப்பீடு கோரி வடகாடு கடைவீதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், வடகாடு நாம்தமிழர் கட்சி அலுவலகத்தில் ஆடுகளை இழந்த விவசாயிக்கு சுமார் ரூ.25 ஆயிரம் மதிப்பில் 4 ஆடுகளை நாம்தமிழர் கட்சியினர் வழங்கினர். இந்நிகழ்வில், அக்கட்சியின் ஆலங்குடி தொகுதி செயலர் ராஜாராம், மாவட்ட பொறுப்பாளர் முரளிதரன், நிர்வாகிகள் முருகேசன், தமிழரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





▶ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் 2023ம் ஆண்டுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சியினர் முன்னிலையில் நேற்று வெளியிடப்பட்டது. அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) கணேசன் மற்றும் அலுவலர்கள்.

# கண்டெய்னரில் ரூ.1.68 கோடி லேப்டாப் செல்போன் கொள்ளை: 3 பேர் சுற்றிவளைப்பு

திருப்பதி, நவ.10

அரியானா மாநிலம் பிலாஸ்பூரில் இருந்து தனியார் கொரியர் நிறுவனத்தின் கண்டெய்னர் லாரியில் சுமார்2கோடிமதிப்பிலான லேப்டாப், செல்போன் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் ஏற்றிக்கொண்டு சென்னை நோக்கி வந்து கொண்டு இருந்தது. லாரியை ஜுபேர் என்பவர் ஓட்டி வந்தார். லாரி ஆந்திர மாநிலம் கடப்பா ஒய்.எஸ்.ஆர் மாவட்டம், குடிப்பாடு தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தது.

அப்போது லாரியில் லேப்டாப் செல்போன் எடுத்து வருவதாக பெங்களூருவைச் சேர்ந்த சல்மான் அகமது, முகமது ரஹ்மான் ஷெரிப் ஆகியோருக்கு லாரி டிரைவர் ஜுபேர் தகவல் கொடுத்தார். இதையடுத்து அவர்கள் 2 பேரும் 2 கார்களில் தங்களது நண்பர்களை அழைத்துக்கொண்டு கண்டெய்னர் லாரி இருந்த இடத்திற்கு வந்தனர். அப்போது கண்டெய்னர் லாரியின் பூட்டை உடைத்து அதிலிருந்து செல்போன், லேப்டாப் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்களை கார்களில் ஏற்றிக்கொண்டு தப்பினர்.

தேசிய நெடுஞ்சாலையில் லாரியை நிறுத்திவிட்டு தூங்கிக்கொண்டு இருந்தபோது மர்ம நபர்கள் லாரியில் இருந்த பொருட்களை திருடிச்சென்றதாக கடப்பா போலீசில் லாரி டிரைவர் ஜுபேர் புகார் செய்தார். இதுகுறித்து கடப்பா டி.எஸ்.பி., வெங்கடேஷ் சிவா ரெட்டி தலைமையில் தனிப்படை அமைத்து கொள்ளையர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் தேசிய நெடுஞ்சாலையில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.டி.வி., காட்சிகளில் கொள்ளை நடந்தபோது லாரி டிரைவர் ஜுபேரும் உடனிருந்தது தெரிந்தது. இதையடுத்து லாரி டிரைவர் ஜுபேர் தனது நண்பர்களுடன் சேர்ந்து கொள்ளையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து ஐதராபாத் அருகே சோதனை சாவடியில் அவ்வழியாக வந்த லேப்டாப் திருடப்பட்ட காரை மடக்கி நிறுத்தினர். போலீசாரை கண்டதும் காரில் இருந்தவர்கள் ஓடினர். இதில் 2 பேர் சிக்கினர். மற்ற 4 பேர் தப்பி ஓடிவிட்டனர். கண்டெய்னர் லாரியில் கொள்ளையடிக்கப்பட்ட செல்போன், லேப்டாப் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் காரில் இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து டிரைவர் உள்பட 3 பேரை கைது செய்த போலீசார் காருடன் கொள்ளைபோன பொருட்களை பறிமுதல் செய்தனர்.



Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

புதுகை
# வரலாறு
நாளிதழ்

## நிறுவனத்தில் பணிபுரிய
# செய்தியாளர்கள் தேவை

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

**தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.**

**தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.**

தாபால் அனுப்பவேண்டிய முகவரி :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : **98420 98534**

புதுகை
# வரலாறு
நாளிதழ்

## நிறுவனத்தில் பணிபுரிய
# ஆட்கள் தேவை

## காலிப் பணிஇடங்கள் 2

**PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN**

தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள **DTP** ஆப்பரேட்டர்கள் சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

**திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்**

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்

மேலும் தொடர்புக்கு :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : **98420 98534**

| சென்னை / புதுக்கோட்டை | 10.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|



# 50வது தலைமை நீதிபதியாக பதவியேற்றார் சந்திரசூட்

# தமிழக வாக்காளர் பட்டியலில் பெண்களே அதிகம்





# மருத்துவ கல்லூரியில் ராகிங் 7 மாணவர்கள் சஸ்பெண்டு

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சுரேந்திரநாத் பானர்ஜி , இந்திய அரசியல்வாதி, கல்வியாளர் (பி.1848) (இ.1925)



வி. கணபதி அய்யர் , இந்தியக் கணிதவியலாளர் (பி.1906) (இ.1987)



கொத்தமங்கலம் சுப்பு , தமிழக எழுத்தாளர், நடிகர், கவிஞர் (பி.1910) (இ.1974)



கேசரிநாத் திரிபாதி , இந்திய அரசியல்வாதி (பி.1934)



## இன்றைய நினைவு நாள்

தமிழ்வாணன் , தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (பி.1926) (இ.1977)



புஷ்பா தங்கதுரை , தமிழக எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி.1920) (இ.2005)



டி. என். சேஷன் , இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் (பி.1932) (இ.2019)

